1970 மார்ச் 23]

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பரங்கிப் பேட்டைக்கு போர்டோநோவோ என்ற பெயர் இருக்கிறது. ஆங்கிலேயர் காலத்தில் அது துறைமுகமாக இருந்து, பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல கட்டிடங்கள் இருக்கின்றன. சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர் ஆகிய இடங்களிலிருந்து வரும் ஜனங்கள் நாகப்பட்டினத்தில் இறங்கவேண்டியிருக்கிறது. அப்படி அங்கு இறங்க முடியவில்லை என்றால், திரும்பவும் சென்னைக்கு வந்து போகவேண்டியிருக்கிறது. ஆகவே, பரங்கிப்பேட்டை துறைமுகத்தை அமைத்தால், நிச்சயம் எல்லா மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும், பல விரயங்கள் ஆகா. ஆகவே, திரும்பவும் நம்முடைய அரசு பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: போதிய வணிகப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால், இந்தத் துறைமுகத்தை மூடுவதற்கான அந்த யோசனை, ஆராயப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மீண்டும் போதிய போக்குவரத்து உண்டாவதற்கு சாத்தியக்கூறுகள் தென்படுமானால், அது அந்த நேரத்தில் ஆராயப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of ports recommended by the State Government to the Central Government. Is there any order of priority fixed for the same?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, at the moment we are engaged in improving the facilities at the Cuddalore Port. As the hon. Member is aware, the Tuticorin Port is also being developed as a major port. Apart from these, there are minor improvements being made to the various other ports.

செங்கீரைக் காட்டில் கிடைக்கும் காவிக்கல்

*507 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள செங்கீரைக் காட்டுப் பகுதியில் விளையும் காவிக் கல்லைக் குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. ச. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள செங்கீரைக் காட்டுப் பகுதியில் கிடைக்கும் ரெட்டாக்கர் வெளிநாடு ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்கிற

காரணத்தினால், வெளி நாட்டு நாணயத்தை சேமிக்கலாம் என்ற முறையிலாவது, அனுமதி கொடுப்பதற்கு சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இந்தக் கேள்வியில் கேட்கப் பட்டிருப்பது செங்கீரைக் காட்டுப் பகுதியில் உள்ள செங்கால்க் கற்களை குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையி லுள்ளதா என்பது தான். ஏற்கனவே புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மூலம் கருப்பையா அம்பலம் என்பவருக்கு நீண்ட கால குத்தகைக்கு (பெர்பெச்சுவல் லீஸ்) விடப்பட்டது. திருச்சி மாவட்ட கலெக்டர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அவரை வெளியேற்ற முடியுமா என்பதுபற்றி வழக்கறிஞர், நிபுணர்கள் ஆலோசனை பெற்று வருகிறார். மேற்கொண்டும் நிபுணர் ஆலோசனை பெறவேண்டிய காரணத்தினால், இப்பொழுது அந்த ஒப்பந்தம் அப்படியே இருக்கிறது. அவருக்கு அதிக லாபம் வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34 கொடுக்கிறார். அவருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 10,000 இலாபம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதை எடுத்துக்கொள்வது பற்றி இப்பொழுது சட்ட இலாகா ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆலோசனை முடிந்ததற்குப் பின்னால் ஒரு முடிவு எடுக்கப்படும்.

மாயூரம் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

*508 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) மாயூரம், மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையில் 1969-ம் ஆண்டு வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் அவ்வாறு நீக்கப்பட்டதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:

(அ) மாயூரம், மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டில் 10 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

(இ) (1) 1966-ஆம் ஆண்டில் இவ்வாலையில் ஏற்பட்ட கதவடைப்பை அடுத்து, மூன்று தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது.

(2) சிக்கன நடவடிக்கை காரணமாக, ஒருவர் ஆட்குறிப்பு செய்யப்பட்டார்.

(3) கொடுத்த வேலையைச் செய்ய மறுத்ததற்காக, ஒருவருக்கு வேலை மறுக்கப்பட்டது.